## தமிழ்நாட்டுக்கு துரோகம் இழைக்கும் பாசிச பா.ஜ.க. வின் சூழ்ச்சிகளை முறியடிக்க,

# அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் தந்த அறிவு ஆயுதத்தை, நம் கைகளில் ஏந்துவோம்!

## குன்றத்தூரில் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!





**குன்றத்தூர்,செப்.12-**

**குன்றத்தூரில் மாமேதை அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலையை, கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``சூழ்ச்சிகளை முறியடிக்க, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் தந்த அறிவு ஆயுதத்தை, நாம் அத்தனைபேரும் கைகளில் ஏந்துவோம். அண்ணல் அம்பேத்கர் புகழ் ஓங்கட்டும். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வென்றே தீரும்” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையை இன்றைக்கு குன்றத்தூரில் திறந்து வைப்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையைத் திறந்து வைப்பதன் மூலம் குன்றத்தூருக்கு மேலும் ஒரு சிறப்பு வந்திருக்கிறது. அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறந்து வைக்கின்ற வாய்ப்பை, எனக்கு அளித்தமைக்கு உங்கள் அனைவருக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட இயக்கக் கொள்கைகளுக்கும், அண்ணன் அம்பேத்கரின் கருத்துகளுக்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு உண்டு. எனக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், சரியாக இரண்டு மாதங்களுக்கு முன்பு, எழுச்சித் தமிழர் அண்ணன் திருமா அவர்களும், நானும் இணைந்து அண்ணல் அம்பேத்கரின் சிலையை, கந்தர்வக்கோட்டையில் திறந்து வைத்தோம்.

அன்றும் மிதமான மழை பெய்தது. இன்றும் அந்த மழை பயமுறுத்துகிறது. இருந்தாலும், அந்த மழைக்கு இடையே எழுச்சியாக திரண்டு இருக்கின்ற உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சமூகப் புரட்சியாளர்கள்

நம் திராவிட இயக்கத்துக்கும், அம்பேத்கரின் கருத்துகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டுமே சமத்துவத்தையும், சமூக நீதியையும்தான் வலியுறுத்துகின்றன. அதனால்தான் அண்ணல் அம்பேத்கரையும், தந்தை பெரியாரையும் சமூகப் புரட்சியாளர்கள் என்று பெருமையாக அழைக்கிறோம். அதனால்தான் அம்பேத்கர் அவர்களை `தாடி இல்லாத பெரியார்’ என்றும், பெரியார் அவர்களை `தாடி வைத்த அம்பேத்கர்’ என்றும் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்.

ஒரு காலத்தில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அறிவு, திறமை, தகுதி கிடையாது என்றும், தாங்கள்தான் அறிவுஜீவிகள் என்று பிற்போக்குக் கூட்டம் நினைத்துக் கொண்டிருந்தது. இன்றைக்கும் ஒரு சில கூட்டம் நினைத்துக்கொண்டு இருக்கிறது. அந்த கூட்டம் வாயடைத்துப் போகின்ற வகையில், இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை எழுதித் தந்த அறிவாசான்தான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அதனால்தான் இன்றைக்கும் அனைவருக்குமான தலைவராக, எல்லோரும் கொண்டாடுகின்ற தலைவராகத் திகழ்ந்துகொண்டு, உயர்ந்து நிற்கின்றார்.

நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு வார காலம் அரசுப் பயணமாக சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இங்கிலாந்து, ஜெர்மனி சென்று வந்தார். லண்டனில் உள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டை முன்னிட்டு, தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, நமக்கெல்லாம் பெருமை சேர்த்தார். அதுமட்டுமல்ல, முக்கியமாக லண்டனில் இருக்கின்ற அண்ணல் அம்பேத்கர் வாழ்ந்த வீட்டிற்கும், முதலமைச்சர் அவர்கள் சென்று பார்த்து வந்தார்.

### மனதை கவர்ந்த புகைப்படம்

அண்ணல் அம்பேத்கர் வாழ்ந்த இல்லத்தில், அந்த வீட்டுச் சுவற்றில் அண்ணல் அம்பேத்கர் அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் பேசிக்கொண்டு இருந்த ஒரு புகைப்படம், தன் மனதை மிகவும் கவர்ந்தது. அது மிகவும் எனக்கு பிடித்த புகைப்படம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். ஆகவே, நம் முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் என்பது வெறும் முதலீடுகளை ஈர்க்க மட்டுமல்ல. தந்தை பெரியாரின், அண்ணல் அம்பேத்கரின் கொள்கைகளை முதலீடுச் செய்யத்தான் அங்கு செல்கிறேன் என்று சொல்லி, சென்று வந்தார் நம் முதலமைச்சர் அவர்கள்.

எந்த மக்களிடையே பிரிவினைவாதத்தை உருவாக்கி, அதில் குளிர் காயலாம் என்று நம் இன எதிரிகள் நினைக்கிறார்களோ? அந்த மக்கள் அனைவரும் இன்றைக்கு ஒன்றுகூடி இருக்கிறோம். இந்த சிலைக்கு நாம் மரியாதை செலுத்தியிருக்கிறோம்.

இந்த ஒற்றுமையைத்தான் எப்படியாவது குலைக்க முடியுமா என்று நம் இன எதிரிகள் காத்துக்கொண்டு, முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த சூழ்ச்சிக்கெல்லாம் நம் தமிழ்நாட்டு இளைஞர்கள் என்றைக்கும் பலியாக மாட்டார்கள் என்று இந்தக் கூட்டத்தில், உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது தெளிவாகத் தெரிகிறது.

குறிப்பாக, இந்த நிகழ்ச்சிக்கு மகளிர் அதிகமாக வந்திருக்கிறீர்கள். இந்த சிலையைத் திறந்து வைக்கும்போது டாக்டர் அம்பேத்கர் வாழ்க, அண்ணல் அம்பேத்கர் வாழ்க என்று முழக்கம் போட்டீர்கள். அம்பேத்கர் கொடுத்த அரசியலமைப்புச் சட்டத்தை எப்பாடுபட்டாவது காப்பாற்ற வேண்டும் என்ற உறுதிமொழியை, இந்த சிலைக்கு முன்பு நாம் அனைவரும் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

### மிகப்பெரிய வெற்றி

அம்பேத்கர் அவர்கள் தந்த அரசியலமைப்புச் சட்டத்தை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று பாசிச பா.ஜ.க. துடித்துக்கொண்டு இருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நம் தலைவர் அவர்களின் முயற்சியால், இந்தியா கூட்டணி உருவானது. அதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் 39, புதுச்சேரியில் 1 உட்பட 40க்கு 40 தொகுதிகளிலும், தமிழ்நாட்டு மக்கள் மிகப்பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்தீர்கள்.

அதன் காரணமாகத்தான், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அடைந்த வெற்றியை, அவர்களால் தமிழ்நாட்டில் பெற முடியவில்லை. எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியாமல், மெஜாரிட்டி பெற முடியாமல், பா.ஜ.க. இப்போது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறது.

தனிப்பெரும்பான்மை மட்டும் கிடைத்திருந்தது என்றால், நம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை, பாசிச பா.ஜ.க. என்றைக்கோ மாற்றியிருக்கும். அரசியல் சட்டத்தை மாற்றி, அதற்குப் பதிலாக மனுதர்மத்தை, சட்டமாகக் கொண்டு வந்தாலும், வந்திருப்பார்கள்.

பாசிசக் கூட்டத்தின் அந்தக் கனவைத் தகர்த்தெறிந்தவர் நம் முதலமைச்சர் அவர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணியின் அங்கங்களாக இருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், இன்றைக்கு தி.மு.கழகத்துடன் கைகோர்த்து நிற்கிறது. அதனால்தான் பாசிச பா.ஜ.க.வால் நெருங்க முடியாத கோட்டையாக நம் தமிழ்நாடு விளங்கிக்கொண்டு இருக்கிறது.

அந்த ஒற்றுமையை சிதைக்க, பா.ஜ.க. எவ்வளவோ முயற்சிகளைச் செய்துகொண்டு இருக்கிறது. ஆனால், அவர்களின் எண்ணம் ஒருபோதும் தமிழ்நாட்டில் நிறைவேறாது. ஏனென்றால், அண்ணல் அம்பேத்கரையும், தந்தை பெரியாரையும் தெளிவாகப் புரிந்துகொண்ட மண் நம் தமிழ்நாடு.

இங்கு அண்ணன் திருமாவளவன் பேசும்போது குறிப்பிட்டார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் சென்னையில் இருக்கின்ற சட்டப் பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் அவர்களின் பெயரை சூட்டினார் என்று சொன்னார்கள். அம்பேத்கரின் சொந்த மாநிலமான மகாராஷ்டிரா மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை வைக்க வேண்டும் என்று அப்போது பெரிய போராட்டம் நடந்தது.

### உடன்பிறப்புகள் தந்தி

கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் அந்தப் போராட்டம் நீடித்தது.

அந்த மாநிலத்தில் இருக்கின்ற உயர் ஜாதி மக்கள் அதைத் தொடர்ந்து எதிர்த்து வந்தார்கள். இதை கேள்விப்பட்ட தலைவர் கலைஞர் அவர்கள், நம் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறார். அங்கு இருக்கின்ற சட்டப் பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் வைக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றுகிறார். அதுமட்டுமல்ல, அம்பேத்கரின் பெயரை வைக்கச் சொல்லி, தமிழ்நாட்டில் இருக்கின்ற தி.மு.க. உடன்பிறப்புகள் தந்தி அனுப்ப வேண்டும் என்று கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்.

தமிழ்நாட்டிலிருந்து அன்றைக்கு லட்சக்கணக்கான தந்திகள் மகாராஷ்டிரா மாநிலத்திற்குச் சென்றன. இன்றைக்கு அந்த பல்கலைக்கழகத்திற்கு, `டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் மரத்வாடா பல்கலைக்கழகம்’ என்று பெயர் வந்திருக்கிறது என்றால், அதற்கு மிகமிக முக்கியமான காரணம் கழகத்தின் உடன்பிறப்புகள்தான் என்றும் சொல்லலாம்.

### சமத்துவ நாளாக அறிவிப்பு

இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 ஆம் தேதி, அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை சமத்துவ நாளாக அறிவித்து, சிறப்பாகக் கொண்டாடி வருகிறார். நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைவிட, தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒடுக்கப்பட்ட மக்கள் வேகமாக முன்னேறி வருகிறார்கள்.

அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், வெளிநாடுகளில் உயர் கல்வி படிக்க ஆதிதிராவிட மாணவர்களுக்கு நிதியுதவி போன்ற திட்டங்கள் மூலம் ஒடுக்கப்பட்ட சமுதாயத்திலிருந்து, ஆய்வாளர்களும், தொழிலதிபர்களும் இப்போது உருவாகி வருகிறார்கள். நம் அரசின் திட்டங்களால் ஒடுக்கப்பட்ட சமூக ஆண்கள் மட்டுமல்ல, ஆண்களுக்கு நிகராக பெண்களும் முன்னேறி வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பிடிக்காமல் புதிய கல்விக்கொள்கை, மும்மொழிக் கொள்கை, இந்தித் திணிப்பு, தொகுதி மறுவரையறை, நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு எல்லா வகையிலும், நம் தமிழ்நாட்டுக்கு அநீதியை இழைத்து வருகிறது. இவற்றையெல்லாம் துணிச்சலாக எதிர்க்கக்கூடிய இந்தியாவிலேயே ஒரே தலைவராக, நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் உருவாகி வருகிறார்கள்.

ஆகவே, நம் தலைவர் அவர்களின் முயற்சிகளுக்கு இங்கு வந்திருக்கின்ற நீங்கள் அத்தனைபேரும் பக்க பலமாக இருக்க வேண்டும்.

### கொள்கைக் கூட்டணி

தி.மு.க. தலைமையில் அமைந்திருக்கின்ற கூட்டணி, வெறும் அரசியல் கூட்டணியல்ல. இது கொள்கைக் கூட்டணி என்பதை மீண்டும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். 2026 இல் கழக அணி 200க்கும் அதிகமான தொகுதிகளில் வென்றிட வேண்டும். அந்த வெற்றிக் கணக்கு, இந்த செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து தொடங்க வேண்டும் என்ற உறுதிமொழியை நீங்கள் ஏற்க வேண்டும்.

சங்கிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்க, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் தந்த அறிவு ஆயுதத்தை நாம் அத்தனைபேரும் கைகளில் ஏந்துவோம். அண்ணல் அம்பேத்கர் புகழ் ஓங்கட்டும். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வென்றே தீரும் என்றுச் சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, காங்கிரஸ் கட்சி மாநில தலைவர் செல்வப்பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் துணைப் பொதுச் செயலாளர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, வன்னிஅரசு, மண்டலப் பொறுப்பாளர் பெரம்பலூர் கிட்டு, தலைமை நிலையச் செயலாளர் தமிழ்ச்செல்வன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் படப்பை மனோகரன், மாவட்டக் கழக அவைத் தலைவர் துரைசாமி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கருணாநிதி, கோபால், நகரக் கழகச் செயலாளர்கள் சத்யமூர்த்தி, ஜவாஹிருல்லா, சதீஷ்குமார், திருநாவுக்கரசு, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், ஆசிரியர் முன்னேற்றச் சங்கத் தலைவர் தியாகராஜன், கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் பிரபு, தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் தமிழ்மாறன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநிலச் செயலாளர்கள் மேனகாதேவி, சாமுவேல் எபினேசர், காங்கிரஸ் நிர்வாகி ஐயப்பன், எம்.கே.டி.கார்த்தி, இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.